7. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளுக் கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு இருக்கும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3—3—1982 (புதன்) முதல் 12—3—1982 (வெள்ளி) முடிய.	ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளபடி.
13—3—1982 (சனி) ..	28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். 39—சாலைகளும் பாலங்களும் 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
14—3—1982 (ஞாயிறு) ..	விடுமுறை.
15—3—1982 (திங்கள்) ..	29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். 33—வீட்டுவசதி. 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.
16—3—1982 (செவ்வாய்) ..	17—கல்வி (பேரவை காலை மாலை இருவேளையும் கூடும்).
17—3—1982 (புதன்) ..	31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். 44—எழுதுபொருள்-அச்சுத் துறை. (பேரவை காலை-மாலை இரு வேளையும் கூடும்.)

(பிற்பகல் 1.30)

18— 3—1982 (வியாழன்) .. காலை—

1—நில வரித் துறை.

11—மாவட்ட நிர்வாகம்.

41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாலை—

36—பாசனம்.

50—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

27—கதர்.

37—பொதுப் பணிகள் — கட்டிடங்கள்.

38—பொதுப்பணிகள் — பணியாளர் அமைப்பும் கருவிகளும் தளவாடமும்.

51—பொதுப் பணிகள் — கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

19— 3—1982 (வெள்ளி) .. காலை:

24—தொழில்கள்.

49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாலை:

5—முத்திரைத் தாள்கள் —நிர்வாகம்.

6—பத்திரப் பதிவு.

10—பால்வழங்கு திட்டங்கள்.

20— 3—1982 (சனி) .. 13—நீதி நிர்வாகம்.

14—சிறைச்சாலைகள்.

23—கூட்டுறவு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

21— 3—1982 (ஞாயிறு) .. விடுமுறை.

22— 3—1982 (திங்கள்) மற்றும் 23— 3—1982 (செவ்வாய்) 15—காவல் துறை. 16—தீயணைப்புப் பணிகள்.

24— 3—1982 (புதன்) .. காலை :

3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள் — நிர்வாகம்.

40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.

53—சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

மாலை :

அரசினர் சட்ட முன்வடிவுகள்.

25— 3—1982 (வியாழன்) .. 1981–82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

ஷை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

26— 3—1982 (வெள்ளி) ... தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.

27— 3—1982 (சனி) ... காலை :

(1) 1981–82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு விவாதமின்றி நிறைவேற்றல்.

(2) 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.

		மாலை :
		22—கால்நடை வளர்ப்பு.
		30—சமூக நலன்.
28— 3—1982 (ஞாயிறு)	..	விடுமுறை.
29— 3—1982 (திங்கள்)	..	9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையியிடப் பணியாளர்கள்
		7—மாநில சட்டமன்றம்.
		8—தேர்தல்கள்.
		42—ஒய்வூதியங்களும் ஏனைய ஒய்வு கால நன்மைகளும்.
		43—பல்வகை.
		55—பல்வகை மூலதனச் செலவு.
		56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.
		1982–83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.
30— 3—1982 (செவ்வாய்)	..	ஷ்ஷ சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் அன்று எடுத்துக்கொள்ளப்பெறும் மானியக் கோரிக்கைகள் தவிர 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் முடிய எடுத்துக் கொள்ளப்பெறும் மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் ஏற்கனவே அறிவித்தபடி 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாள் காலை 11-00 மணிக்குள் கொடுக்கப்பட வேண்டும்.

1982 மார்ச் 2] [பேரவைத் தலைவர்]

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப் பெறும் மானியக் கோரிக்கைகள் எண்கள் 28, 39 மற்றும் 52, ஆகியவற்றிற்கு வெட்டுத் தீர்மானங்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் காலை 11 மணிக்குள் கொடுக்கப் பெற வேண்டும்.

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் முதல் எடுத்துக் கொள்ளப்பெற இருக்கும் ஏனைய மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் ஏற்கனவே அறிவித்தபடி 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாள் அன்று காலை 11-00 மணிக்குள் கொடுக்கப் பெற வேண்டும்.

மற்ற அலுவல்கள் குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3—3—1982) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

107. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் II(1) வ.வ.ச.அ./239(பி)/81 ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 1423 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

108. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும சி.ஐ.டி. காலனி பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதியிடப் பெற்ற 1490 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].